**செ. கு. எண்: 149** **நாள்: 22.08.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 22.8.2018</u>

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரங்கசாமி என்பவரின் மகன் திரு. பிச்சமுத்து என்பவர் எதிர்பாராத விதமாக அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், நாகுடி சரகம், நாவினிவயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துராமலிங்கம் என்பவரின் மனைவி திருமதி. மாசிலாமணி என்பவர் பலத்த காற்றின் காரணமாக மின் கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், வாலாந்தூர் உள்வட்டம், கல்கொண்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாயாண்டி என்பவரின் மகன் திரு. மொக்குசு என்பவர் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வியன்னூர் கிராமம், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. மைக்கேல்ராஜ் என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கொல்லங்கோடு ‘A’ கிராமத்தைச் சேர்ந்த திரு. பானுவேல் என்பவரின் மகன் திரு. ஜெயகுமார் என்பவர், எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த திரு. சந்திரசேகர் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த திரு. நாகராஜன் என்பவரின் மனைவி திருமதி பாப்பா என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த **ஏழு** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்த **ஏழு** நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**